**இலங்கை வலு உயர்த்தும் சம்மேளனம் - 2020**

--------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**
**மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை வலு உயர்த்தும் சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, தேறிய ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுப்பேரேடு மற்றும் காசேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்படவில்லை. | பொதுப்பேரேடு மற்றும் காசேடு என்பன முறையாகப் பேணப்படல் வேண்டும்.. |

#### 1.5.2 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| I. | வங்கி நடைமுறைக் கணக்கு | 9,366 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வங்கிக் கூற்றுக்கள் | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்பட வில்லை. | மீதிகளின் இருப்பை உறுதிப்படுத்துவ தற்கான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| II. | அச்சிடல் மற்றும் எழுதுகருவிகள் செலவு | 4.235 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பட்டியல்கள் | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்பட வில்லை. | செலவுகளை உறுதிப்படுத்துவ தறகான ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| III. | செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 15,000 | தீர்ப்பனவு விபரங்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பட்டியல் | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்பட வில்லை. | செலுத்த வேண்டியவற்றை உறுதிப்படுத்துவதற்கு போதுமானளவு கணக்காய்வுச் சான்றுகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| IV. | செலுத்த வேண்டியவை | 480,717 | சுயாதீன உறுதிப்படுத்தல் | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்பட வில்லை. | சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் விளையாட்டு அமைச்சிடமிருந்து பெறப்பட்ட விமானப் பயணச் சீட்டுக்களிள் தொகையான ரூபா 2,473,220 கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப் படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் முறையாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு சம்மேளனம் ரூபா 16,717 தேறிய பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட பற்றாக்குறை ரூபா 481,201 ஆகும். சம்மேளனத்தின் நடைமுறை பொறுப்புகள் அதன் நடைமுறை சொத்துக்களை விட ரூபா 486,351 ஆல் மற்றும் மொத்த பொறுப்புகள் அதன் மொத்த சொத்துக்களை விட ரூபா 481,201 ஆல் விஞ்சப்பட்டிருந்தன. இது பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருப்பதையும் அது சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையில் குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதையும் குறிக்கிறது. இருப்பினும், சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக எதையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்பட வில்லை | சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையில் குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை குறைப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக வெளிப்படுத்தலொன்றை கொண்டிருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16,717 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 78,300 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 95,017 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் ரூபா 101,354 ஆல் குறைவடைந்தமையே இப்பின்னடைவிற்கு காரணமாக இருந்தது.